செய்தி வெளியீடு எண்: 627 நாள்:28.08.2020

**<u>இன்று (28.8.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில், மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய தொடக்க உரை:</u>**

அனைவருக்கும் வணக்கம்.

உலக அளவில் பரவியுள்ள கொரோனா வைரஸ் நோய் தொற்று தமிழகத்திலும் பரவியுள்ளதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகள் தஞ்சாவூர் மாவட்டத்தில் எவ்வாறு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது குறித்து ஆய்வு செய்து, நோய்த் தொற்று எந்த அளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது என்ற விவரங்களை தெரிந்து கொள்வதற்காக இந்த ஆய்வுக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. கொரோனா வைரஸ் நோய்த் தடுப்புப் பணி தொடர்பாக, மாண்புமிகு அம்மாவின் அரசு அறிவித்த வழிமுறைகளைப் பின்பற்றி தஞ்சாவூர் மாவட்ட நிர்வாகம் சிறந்த முறையில் செயல்படுத்தியதன் விளைவாக, கொரோனா வைரஸ் நோய் தொற்றுப் பரவல் படிப்படியாக குறையத் தொடங்கி, கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. இருந்தாலும், பொதுமக்கள் அரசு அறிவிக்கின்ற வழிமுறைகளை தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் **2,227** காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு, அதில் **1,04,658** நபர்கள் கலந்து கொண்டுள்ளனர். இதன்மூலம், நோய் அறிகுறிகள் உள்ளவர்களைக் கண்டறிந்து, பரிசோதனை செய்து, தொற்றுள்ளவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளித்து, குணப்படுத்தி வருகிறோம். நோய்த் தொற்று ஏற்பட்டிருந்தால், மாவட்ட நிர்வாகத்திற்கோ, சுகாதாரத் துறைக்கோ, வருவாய்த் துறைக்கோ தெரிவிக்கப்பட்டால், நடமாடும் மருத்துவக் குழு உடனடியாக அங்கே சென்று, அவர்களுக்கு பரிசோதனை செய்து, நோய் அறிகுறி தென்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்த்து உரிய சிகிச்சை அளித்து குணப்படுத்தக்கூடிய சூழ்நிலையை மாவட்ட நிர்வாகம் எடுத்து வருகிறது. இதனால் கொரோனா வைரஸ் நோய் தொற்றுப் பரவலை கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடிகிறது.

கொரோனா வைரஸ் நோய் தொற்றுப் பரவல் உள்ள பகுதியில் சுகாதாரத் துறை, உள்ளாட்சித் துறை மூலமாக வீடு, வீடாகச் சென்று, அவர்களுக்கு சளி, காய்ச்சல், தொண்டைவலி, இருமல் அல்லது ஏதாவது வேறு நோயினால்

பாதிக்கப்பட்டிருக்கிறார்களா என்ற விவரங்களை சேகரித்து, அந்த விவரங்களை சுகாதாரத் துறை பரிசீலித்து, அவர்களுக்கு நோய் அறிகுறி தென்பட்டால், அவர்களுக்கு சிகிச்சை அளித்து, குணமடையச் செய்கிறார்கள். இவ்வாறெல்லாம் அரசு துரிதமாக செயல்பட்டதன் விளைவாக, கொரோனா வைரஸ் நோய்த் தொற்று இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது.

இந்த நோய் தொற்றுக்கு மருந்து கண்டுபிடிக்காத சூழ்நிலையில், பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பல்வேறு நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்கள் மருத்துவர்களின் ஆலோசனையின்படி தகுந்த சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். ஏதாவது அறிகுறி தென்பட்டால் பரிசோதனை செய்து, நோய்த் தொற்று ஏற்பட்டவர்கள் சிசிக்சை பெற்றுக் கொள்ள வேண்டும். காய்ச்சல் தானே இருக்கிறது, மருந்து சாப்பிட்டால் போதும் என்று சாதாரணமாக எடுத்துக் கொண்டு இரண்டு, மூன்று நாட்கள் கழித்து மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்தால் கூட உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடுகிறது. பலரும் அப்படித்தான் உயிரிழந்திருக்கிறார்கள். ஆகவே, வேறு ஏதாவது நோய்களுக்காக சிகிச்சை பெற்று வருகின்றவர்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும். சிறு அறிகுறி தென்பட்டாலும் உடனடியாக மருத்துவமனையை அணுக வேண்டும்.

அதேபோல, கர்ப்பிணிப் பெண்கள், முதியோர் போன்றவர்களுக்கு எளிதில் இந்த நோய்த் தொற்று ஏற்பட்டு விடும். எனவே, அவர்களை கவனத்துடன் பார்த்துக் கொள்ள வேண்டும். அரசு அறிவிக்கின்ற வழிமுறைகளை பொதுமக்கள் தவறாமல் பின்பற்றி, கொரோனா வைரஸ் நோய் தொற்றுப் பரவலை குறைத்து, படிப்படியாக இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அம்மாவின் அரசு கொரோனா தொற்றை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை முனைப்போடு எடுத்து வருகிறது. அதிகமான பரிசோதனைகளை இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் செய்யப்படுகிறது. குணமடைந்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. உரிய சிகிச்சை அளிப்பதன் காரணத்தால், இறப்பவர்களின் சதவீதம் குறைந்திருக்கிறது.

கும்பகோணம் அரசு மாவட்ட மருத்துவமனை வளாகத்தில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. பூதலூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்நோயாளிகள் பிரிவு கட்டடம் ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு, பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது. பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை வளாகத்தில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையக் கட்டடம் ரூபாய் 4 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் மூலமாக பெறப்பட்ட 33,830 மனுக்களில் 21,362 மனுக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு, தீர்வு காணப்பட்டுள்ளன. 2019–2020ஆம் ஆண்டில் 6,179 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

இந்த ஆண்டு, ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக, வாய்க்கால்கள் 9,053 கிலோ மீட்டர் நீளத்தில் ரூபாய் 52 கோடி மதிப்பீட்டில் தூர்வாருகின்ற பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டத்தில், பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 3,445 பணிகள் தொடங்கப்பட்டு, 2,737 பணிகள் நிறைவு பெற்றுள்ளன. எஞ்சிய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் 25,728 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 15,437 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பல பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கும்பகோணம் ஒன்றியத்திற்குட்பட்ட 134 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ரூபாய் 110 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. கும்பகோணம், திருப்பனந்தாள், திருவிடைமருதூர் ஒன்றியங்களுக்குட்பட்ட 67 குடியிருப்புகளுக்கும், பாபநாசம் மற்றும் அம்மாப்பேட்டை ஒன்றியங்களுக்குட்பட்ட 252 குடியிருப்புகளுக்கும் கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுமார் ரூபாய் 943 கோடி மதிப்பீட்டில் 48 எண்ணிக்கையிலான சீர்மிகு நகரத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாநகராட்சிக்கு புது அலுவலகக் கட்டடம் ரூபாய் 6.50 கோடியில் கட்டி முடிக்கப்பட்டு 28.5.2020 அன்று என்னால் திறந்து வைக்கப்பட்டது. தஞ்சாவூர்

மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி 2021 ஜனவரி மாதம் நிறைவு பெறும். தஞ்சாவூர் மாநகராட்சி கொள்ளிடம் ஆற்றில் புதிய குடிநீர் ஆதாரத்தை உருவாக்குதல், மேலும் பழுதடைந்த குடிநீர் பிரதானம் மற்றும் பகிர்மானக் குழாய்களை சீரமைக்கும் பணி ரூபாய் 191 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இதன்மூலம் எதிர்கால மக்கள்தொகைக்கு ஏற்ப குடிநீர் வழங்கிடும் திட்டம் 19.2.2021–ல் நிறைவு பெறும்.

பொதுப்பணித் துறை சார்பாக பல தடுப்பணைகள் கட்டப்பட்டு வருகின்றன. நெடுஞ்சாலைத் துறை மூலம் பல சாலைகள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. புதிய பாலப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஏற்கனவே பல பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. புறவழிச் சாலைகள் அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்த காலம் முதல் இன்று வரை, மாண்புமிகு அம்மாவின் அரசு தஞ்சாவூர் மாவட்டத்திற்கு பல்வேறு கல்லூரிகளை வழங்கியுள்ளது. பேராவூரணியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், செங்கிப்பட்டியில் அரசு பொறியியல் கல்லூரியும், பாபநாசத்தில் பாலிடெக்னிக் கல்லூரியும், ஈச்சங்கோட்டையில் வேளாண் கல்லூரியும் அமைத்துக் கொடுத்துள்ளது. ஒரத்தநாட்டில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் தொடங்கப்பட்டுள்ளது. திருபுவனத்தில் ஐடிஐ திறக்கப்பட்டுள்ளது. அதோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் காலத்தில் தஞ்சை மாநகராட்சியாக உருவாக்கப்பட்டது.

வேளாண் பெருமக்களுக்கு, பயிர் காப்பீட்டுத் திட்டம் மூலம் அதிகளவில் இழப்பீட்டுத் தொகை பெற்றுத் தந்துள்ளோம். 2016–17ல் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. கல்வித் தரத்தை உயர்த்த நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

இவ்வாறு மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருவதால், தஞ்சை மாவட்டம் வளர்ந்து வருகிற ஒரு மாவட்டமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

விவசாயப் பெருமக்கள் நீண்ட, நெடிய காலமாக போராடி வந்ததற்கு வெற்றிகிட்டும் விதமாக, வேளாண் பெருமக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் விதமாக, டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அம்மாவின் அரசு அறிவித்துள்ளது. இது ஒரு வரலாற்றுச் சாதனையாகும். இப்பகுதி மக்கள் 50 ஆண்டு காலமாகப் போராடி வந்த நிலையில், காவேரி நதிநீர் பிரச்சனையில் நடுவர் மன்ற தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்தது மாண்புமிகு அம்மா அவர்கள் தான். அதனைத் தொடர்ந்து, அம்மாவின் அரசும், அம்மா அவர்களால் உச்சநீதிமன்றத்தில் தொடுத்த வழக்கை சட்ட ரீதியாகச் சந்தித்து, விவசாய பெருமக்களுக்கு வயிற்றில் பால்வார்க்கும் விதமாக நம் உரிமையை பெற்று தந்துள்ளோம். நமக்கு கிடைக்க வேண்டிய பங்கு நீரை சட்டத்தின் வாயிலாகப் பெற்றதும் மாண்புமிகு அம்மாவின் அரசு தான்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு, தஞ்சாவூர் மாவட்ட மக்களுக்கு தேவையான அனைத்தையும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. குடிமராமத்துத் திட்டம் மூலம் பருவ காலங்களில் பொழியும் மழை நீர் வீணாகக் கடலில் கலப்பதை தடுக்கும் வகையில் ஊராட்சி ஒன்றியம் மற்றும் பொதுப்பணித் துறை சார்பாக உள்ள ஏரிகள், குளங்கள், குட்டைகள் அனைத்தையும் தூர் வாரி தண்ணீரை தேக்கி வைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மாவின் அரசு கால்வாய்களை தூர்வாரும் பணியை சிறப்பாக மேற்கொண்ட காரணத்தால் மேட்டூர் அணையில் திறக்கப்படும் தண்ணீர் கடைமடை வரை உரிய நேரத்தில் சென்று சேர்ந்து, நல்ல விளைச்சல் கிடைத்துள்ளது. கடந்த ஆண்டுகளில் அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் 23 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது, அதிக விளைச்சல் காரணமாக அரசு கொள்முதல் நிலையங்களில் இந்த ஆண்டு 30 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு சாதனை படைத்துள்ளது.

இவ்வாறு பல்வேறு வகைகளிலும், இந்த மாவட்ட வளர்ச்சிக்கும், இந்த மாவட்ட மக்களுக்கும் தேவையான உதவிகளை அம்மாவின் அரசு மேற்கொண்டு வருகிறது.

நன்றி, வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**